25 NOV 1982

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
புதன்கிழமை, 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் 7
பங்குனி 25, துன்மதி—திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து''

பணிவுடையவராக ஒழுகுதல் பொதுவாக எல்லோர்க்கும் நல்லதாகும். அவர்களுள் சிறப்பாக செல்வர்க்கே மற்றொரு செல்வம் போன்றதாகும்.

1. இரங்கல் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் திரு. எஸ் ஆறுமுகம் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. எஸ். ஆறுமுகம் அவர்கள் 2-1-82 ஆம் தேதியன்று மறைந்ததை இப் பேரவைக்கு வருத்ததுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆறுமுகம் அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டுவரை சேலம் மாவட்டம் திருச்செங்கோடு (செட்யூல்ட் வகுப்பு) தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்)

2. வினாக்கள்—விடைகள்
உடுக்குறியிட்ட வினாக்கள்.

தீயணைப்புப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டும் திட்டம்.

*வினா எண். 74—திரு என். பழனிவேல்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தீயணைக்கும் படையில் பணிபுரியும் அலுவலர்களுக்கு வீட்டு வசதி செய்து தரும் திட்டம் எந் நிலையில் உள்ளது?

[1982 ஏப்ரல் 7

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தீயணைப்புப் பணியாளர்களுக்கு குடியிருப்புத் திட்டம் ஒவ்வொரு ஆண்டும், குறைந்தது மூன்று தீயணைப்பு நிலையங்களில் பணி புரிபவர்களுக்காவது நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கருத்தில் முதல் கட்டமாக சிவகாசி, இராணிப்பேட்டை, உடுமலைப்பேட்டை ஆகிய மூன்று இடங்களில் பணிபுரியும் தீயணைப்பு பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்ட 22–1–1982–ம் தேதியிட்ட அரசு ஆணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : தலைவரவர்களே, இந்த தீ அணைக்கும் படையிலே வீட்டுவசதித் திட்டம் இதுவரை எங்கெங்கு அமுலாக்கப்பட்டிருக்கிறது? இன்னும் எங்கெல்லாம் அமுலாக்க அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்பனதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போதுதான் அமுல்படுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. முதல் கட்டமாக சிவகாசி, இராணிப்பேட்டை, உடுமலைப்பேட்டை ஆகிய மூன்று இடங்களில் 120 குடியிருப்புகள் கட்டுவதற்கு 40,50,000/-ம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது முடிந்த பிறகு அடுத்த கட்டமாக தாராபுரம், பெரியகுளம், பெரம்பலூர் ஆகிய இடங்களில் வீடு கட்டும் முயற்சி இருந்து வருகிறது.

புதிய தீயணைக்கும் இயந்திரங்களை இறக்குமதி செய்யும் திட்டம்

*வினா எண்.—775 திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதியதாக தீயணைப்பு இயந்திரங்கள் இறக்குமதி செய்ய மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளதா?

(ஆ) எத்தனை இயந்திரங்கள் வாங்க எவ்வளவு ரூபாய் நிதி உதவக் கேட்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இறக்குமதி செய்வதற்கு எந்த முயற்சியும் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்போது புதிதாக நீரைப் பாய்ச்சி தீயை அணைப்பதற்குப் பதிலாக நுரையைப் பரப்பி தீயை அப்படியே அணைக்கின்ற இயந்திரங்கள் வந்திருப்பதாக செய்தித் தாள்களில் படிக்கிறோம். அவைகளை இறக்குமதி செய்ய அரசு முயலுமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தக்க நேரத்தில் இறக்குமதி லைசென்ஸ் (இம்போர்ட் லைசென்ஸ்) கோரப்படும். இவ்விதம் புதிய இயந்திரங்கள் வாங்க இப்போது உதவி கேட்கவில்லை. ஆனால் பொது